
**இயற்கைக் குடமிளகாய்....பசுமைக்குடிலுக்குள் காய்க்குது பணம்!**



கால் ஏக்கரே போதுமானது. 50 சதவிகிதம் மானியம். 9 மாதங்கள் காய் கிடைக்கும்.பருவம் தப்பிய மழை, தாங்க முடியாத நிலைக்குத் தள்ளும் வகையில் தகிக்கும் வெயில்.. போன்றவற்றையெல்லாம் கூட சமாளித்து, ஆண்டு முழுவதும் தேவையானவற்றை விளைவிக்க உருவாக்கப்பட்டதுதான் பசுமைக்குடில்!

வெளிநாடுகள் பெரும்பாலானவற்றில் தக்காளி, கத்திரி உட்பட பல வகைக் காய்கறிகள் பசுமைக்குடிலுக்குள்தான் விளைகின்றன. இந்தியாவில் ஆரம்ப காலங்களில் மலைப்பகுதியில், கொய்மலர்கள் மற்றும் குடமிளகாய் விவசாயத்துக்கு மட்டுமே பசுமைக்குடில்கள் பயன்படுத்தப்பட்டன. தற்போது சமவெளிப் பகுதிகளிலும் அந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றனர்.பசுமைக்குடில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தொழில்நுட்பம் என்பதால், ரசாயனத்தைக் கொட்டிதான் விவசாயம் செய்கிறார்கள் 99% விவசாயிகள். அவர்களில் இருந்து வேறுபட்டு பசுமைக்குடிலுக்குள் இயற்கை விவசாயம் செய்கிறார் தர்மபுரி மாவட்டம், அமானிமல்லாபுரம் சௌந்திரராஜன்.

கால் ஏக்கரே போதுமானது!

பத்து பதினஞ்சு ஏக்கருல, சுத்தி அலைஞ்சி விவசாயம் பாக்க தோதுப்படாதுனு சொல்றவங்களுக்கு... பசுமைக்குடில் ஒரு வரப்பிரசாதம். ஏக்கர் கணக்கான நிலத்துல சம்பாதிக்கிற பணத்தை, கால் ஏக்கர்ல சம்பாதிக்கலாம் பசுமைக்குடில் இருந்தா" என்று உற்சாகமாகப் பேசத் தொடங்கினார் சௌந்திரராஜன்.

"கிணறு, போர் செட்டோட பத்து ஏக்கர் நிலமிருக்கு. அஞ்சு ஏக்கர்ல தென்னை வைத்திருக்கிறேன். இரண்டு ஏக்கர்ல வாழை, மீதி மூன்று ஏக்கர்ல நெல், காய்கறினு மாத்தி மாத்தி பண்ணிக்குவேன்.

விவசாயம்தான் முழு நேரத்தொழில்ங்கறதால, அதுபத்தி நிறைய விஷயங்களைச் சேகரிக்க ஆரம்பிச்சப்போ..இரண்டு வருடத்திற்க்கு முன்பு பசுமைக்குடில்பற்றிக் கேள்விப்பட்டேன். மானியமும் கிடைத்தால உடனே கால் ஏக்கர் அளவுல பசுமைக்குடில் அமைத்து ரோஜா போட்டேன்.

இயற்கையில் குட மிளகாய்!

ரோஜாவுக்கு முழுக்க முழுக்க ரசாயனம் கொடுத:துதான் வளர்க்கணும். ஆனால், அது ஒண்ணும் சரிப்பட்டு வரலை. என்ன செய்யலாம்னு நிறைய பேர்கிட்ட யோசனை கேட்டப்போதுதான், ‘ஆர்கானிக் உரங்களைப் பயன்படுத்தி, கேப்ஸிகம் (குடமிளகாய்) போடுங்க. நல்லா வரும்னு சொன்னாங்க. உடனே அதையும் செயல்படுத்தினேன். நான் எதிர்பார்த்ததை விட நல்ல மகசூலும் லாபமும் கிடைக்க ஆரம்பிக்கவே, அதையே தொடர முடிவெடுத்திட்டேன்” என்றவர், பசுமைக்குடிலில் குடமிளகாய் சாகுபடி பற்றி கூறினார்.

செம்மண் அவசியம்!

“1,000 அல்லது 500 சதுர மீட்டரில்தான் பசுமைக்குடிலை அமைக்க முடியும். அதிகபட்சம் 1,000 சதுர மீட்டர் அளவுக்கான குடிலுக்கு மட்டுமே ஒருவர் மானியம் பெற முடியும். இதற்கு குறைந்தது கால் ஏக்கர் நிலம் தேவை. செம்மண் பூமியாக இருப்பது நல்லது. பல தனியார் நிறுவனங்களே இதை அமைத்துத் தரும் பணியைச் செய்து வருகின்றன.

கிழக்கு மேற்காகப் பாத்தி!

அடுத்து.. குடிலுக்குள் கிழக்கு மேற்காக மூன்றடி அகலததில் பாத்தி (பெட்) அமைக்க வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் இடைவெளி ஒரு அடி, உயரம் ஒன்றரை அடியும் இருக்க வேண்டும். அதையடுத்து, சொட்டு நீர்ப்பாசனக் குழாய்களை அமைத்துக் கொள்ள வேண்டும். 250 அடி நீளம், 50 அடி அகலத்தில் உள்ள குடிலில் 60 பாத்திகள் அமைக்க முடியும்.

குட மிளகாய்க்கு நாற்றைத்தான் நடவு செய்ய வேண்டும் என்பதால், பாத்திகள் அமைக்கத் தொடங்குவதற்கு முன்னரே சிறிய நிழல்வலைப் பசுமைக்குடிலில் குழித் தட்டுகளில் 40 கிராம் அளவுக்கான விதைகளை விதைக்க வேண்டும். குட மிளகாயில் மஞ்சள், பச்சை, சிவப்பு என மூன்று வண்ணங்கள் இருப்பதால், மூன்றையும் சரிக்குச்சமமாக இருப்பது போல் பார்த்துக் கொள்ள வேண்டும். 27 நாட்கள் வளர்ந்த நாற்றை நடவு செய்யலாம்.

முக்கோண நடவு முக்கயம்!

பாத்தியின் இரண்டு ஓரங்களிலும் நாற்றுகளை 40 சென்டி மீட்டர் இடைவெளியில் முக்கோண நடவு செய்து, இரண்டு நாடகளுக்கு ஒரு முறை மிதமாக தண்ணீர் விட வேண்டும். பத்து நாட்களில் வேர் பிடித்து விடும். அதிலிருந்து பாத்தி காயாத அளவுக்கு தினமும் சிறிது நேரம் நீர் விட்டு வரவேண்டும். தொழுவுரம் இடுவதால், களைகள் முளைத்து வரும். நடவு செய்த 15ம் நாளுக்கு மேல் களை எடுக்க வேண்டும். அதன் பிறகு களைகள் வராது.

கவாத்து முக்கியம்!

ஒவ்வொரு பாத்திக்கும் நேர் மேலே, பாத்திக்கு இணையாக கட்டுக்கம்பிகளை இழுத்து இருபுறமும் கட்ட வேண்டும். குடில் அமைக்கப் பயன்படுத்தப் பட்டிருக்கும் இரும்புக் குழாய்களிலேயே கட்டலாம். ஒரு செடிக்கு நான்கு பிளாஸ்டிக் கயிறகள் என்கிற விகிதத்தில், செடிகளுக்கு மேலே செல்லும் கம்பிகளில் கட்டித் தொங்கவிட வேண்டும்.

செடி வளரும்போது கவட்டை வடிவில் ஒரு தண்டை மட்டும் விட்டு விட்டு மீதித் தண்டுகளைக் கிள்ளிவிட வேண்டும். அந்தக் கவட்டைத் தண்டின் இரண்டு முனைகளில் வளரும் தண்டுகளையும், கவட்டை போலக் கவாத்து செய்து விட்டர்.. மொத்தம் நான்கு தண்டுகள் மட்டும் வளரும். ஒவ்வொரு தண்டையும் மேலே தொங்கும் பிளாஸ்டிக் கயிறு நான்கிலும் ஏற்றி விட வேண்டும். கயிற்றின் கீழ்ப்பகுதியை செடியில் கட்டி விட வேண்டும்.

80 நாட்களில் அறுவடை !

50 – ம் நாளுக்கு மேல் பூவெடுத்துப் பிஞ்சு விட ஆரம்பிக்கும். அதன் பிறகு 15 நாளுக்கு ஒரு முறை 10 லிட்டர் தண்ணீருக்கு 1 லிட்டர் பஞ்சகவ்யா என்ற கணக்கில் கலந்து பயிர்கள் மீது தெளித்து விட வேண்டும். முதல்முறை பஞ்சகவ்யா தெளித்து பத்து நாட்கள் கழித்து 'பவர் பிளானட் ப்ளூம்' என்னும் பயோ ஆர்கானிக் மருந்தை டேங்குக்கு (10 லிட்டர்) 20 மில்லி வீதம் தண்ணீரில் கலந்து 10 டேங்க் தெளிக்க வேண்டும். வேறு எந்த ஊட்டங்களும் தேவையில்லை.

பச்சைக்காயாக தேவையென்றால், 65-ம் நாளுக்கு மேல் அறுவடை செய்யலாம். வண்ணமாக மாற வேண்டும் என்றால், 80 முதல் 90 நாட்கள் காத்திருந்து அறுவடை செய்யலாம். தொடர்ந்து மாதத்துக்கு ஏழு முறை என ஒன்பது மாதங்கள் வரை அறுவடை செய்யலாம்.

மிருதுவாகக் கையாள வேண்டும்!

சாகுபடிப் பாடம் முடித்த சௌந்திரராஜன், “பெரும்பாலும் கலர் வந்த காய்களுக்குதான் நல்ல விலை கிடைக்கும். நாங்க, நல்ல நிறம் வந்தபிறகுதான் அறுவடை செய்கிறோம். முதல் முறை

அறுவடை செய்த போது 300 கிலோ கிடைத்தது. அதற்கடுத்து, 400 கிலோவிலிருந்து 500 கிலோ வரைக்கும் கிடைத்தது. சராசரியாக 400 கிலோ என்று வைத்துக் கொள்ளலாம். மொத்தம் 63 அறுப்புக்கு 25,200 கிலோவுக்கு மேல கிடைக்கும். காயை ரொம்ப மிருதுவாகத்தான் கையாளனும். இல்லையென்றால் வீணாகிவிடும்.

25 ஆண்டுகள் தாக்குப் பிடிக்கும்!

ஒரு தடவை குடில் அமைத்தால் 25 வருடம் வரைக்கும் கூடத் தாங்கும். ஐந்து வருடத்திற்கு ஒரு முறை மராமத்து செய்தால் போதும். இந்த பிளாஸ்டிக் ஷீட்டை மாற்றுவதற்கு 87,000 ரூபாய் ஆகும். குடில் அமைப்பதற்கு ஆறு லட்ச ரூபாய் வரை செலவாகும். அதில் 50 சதவிகிதம் மானியம் கிடைக்கும். முதல் வருடத்திலேயே மொத்தச் செலவையும் எடுத்து விட முடியும். இரண்டாவது வருடத்திலிருந்து வருடத்திற்கு 7 லட்ச ரூபாய் வரைக்கும் லாபம் பார்க்க முடியும்” என்றார், சந்தோஷமாக

**தொடர்புக்கு:**

சௌந்திரராஜன்,

அலைபேசி : 96884 - 74260